# <u>இளம்பிள்ளை முதல்நிலை பேரூராட்சி</u>
## சேலம் மாவட்டம்
### <u>ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை</u>

**ந.க.எண்.283/2021/அ1** **நாள்.22.03.2022**

சேலம் மாவட்டம், இளம்பிள்ளை முதல்நிலை பேரூராட்சி 2021–2022 ஆம் ஆண்டு 15வது நிதி ஆணையம் 2021–2022ஆம் ஆண்டில் சுகாதார மானியம் திட்டதின் கீழ் ஒதுக்கீட்டில் கீழ்கண்ட வேலையினை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் **(Two Cover system)** கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இளம்பிள்ளை முதல்நிலை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அங்கீகாரம் பெற்றவரால் 13.04.2022**<u>ம் தேதி புதன்கிழமை மாலை 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.</u>** ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை<u> 13.04.2022பிற்பகல் 3.00 மணி வரை E-Token / Digital Signature card யை உபயோகித்து</u> <u>http://tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து தகவல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.</u> ஒப்பந்தபுள்ளி கொடுப்பவர்கள் அட்டவணை கலம் எண் 4ல் காணும் விவரப்படியான முன்வைப்புத் தொகைக்கு **“செயல் அலுவலர் இளம்பிள்ளை முதல்நிலை பேரூராட்சி”** என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட வங்கி வரைவோலையை (DD/Banker Cheque) இணைத்து 13.04.2022 **பிற்பகல் 3.00 மணிக்குள் இவ்வலுவகத்திற்கு வந்து சேருமாறு** அனுப்ப வேண்டும். மேலும் **<u>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை (Technical Bid) 13.04.2022 அன்று செவ்வாய்கிழமை மாலை 3.30 மணிக்கு பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அங்கீகாரம் பெற்றவரால் நேரில் ஆஜராகி உள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு 13.04.2022ஆம் தேதி பரிசீலனை செய்யப்படும். வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 12.04.2022 அன்று செவ்வாய்கிழமை மாலை 5.45 மணி வரையில் இப்பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.</u>**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | முன் வைப்பு தொகை ரூ | ஒப்பந்தப் புள்ளி நமுனா விற்பனை வரி உட்பட ரூ | ஒப்பந்த தாரரின் தகுதி | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | இளம்பிள்ளை மேம்பாடுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார பொதுசுகாதார வளாகம் அமைக்கும் | 50.00 | 50000 | 10080 | Class I to IV | 180 நாட்கள் |

**<u>நிபந்தனைகள்</u>**

1. பேரூராட்சிகளில் பணிகள் தொடர்பாக அரசாணைகள் நடைமுறைகள் விதிகள் திட்ட விதிமுறைகள், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்ட விதிமுறைகள் மற்றும் பேரூராட்சிகள் இயக்ககத்தால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின்படி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி கோரும்போது இத்திட்ட பணி முடிந்தவுடன் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் நிபந்தனைகள் ஒப்பந்த பத்திரத்தில் இடம் பெற வேண்டும்.
3. தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ஐ பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள வேண்டும். இரண்டு உறைகள் முறையில் (Two Cover system) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசு ஒப்பந்தப்புள்ளி இணையதளம், பேரூராட்சியின் இணையதளம் மற்றும் பேரூராட்சிகள் துறையின் இணையதளத்தில் இடம் பெறுதல் வேண்டும்.
5. பணிகள் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டின்படியே மேற்கொள்ளப்பட வேண்டும். தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டில் வேறுபாடு ஏற்படின் கண்காணிப்பு பொறியாளரின் முன் அனுமதி பெற்று பணிகள் செய்யப்பட வேண்டும்.
6. ஒப்பந்தப்புள்ளிகள் பதிவேட்டில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி (Technical bid) திறக்கப்பட்ட அன்றே உரிய பதிவுகள் செய்து அன்றைய தேதியில் வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பம் பெறப்பட வேண்டும். மேற்படி தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அதில் தகுதிபெற்ற ஒப்பந்ததாரர்களின் விலை ஒப்பந்தப்புள்ளி (Price bid) மட்டுமே திறக்கப்பட வேண்டும்.
7. தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட பின்னர் உரிய ஆவணங்கள் சரிபார்ப்பு பட்டியலின்படி சரிபார்க்கப்பட்டு, கூர்ந்தாய்வு குழுவினரிடம் (Evaluation check) சரிபார்ப்பு பட்டியலுடன் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.
8. இப்பணிக்கான சோதனை அளவுகள் (Test check) மேற்கொள்ள சம்மந்தப்பட்ட செயற்பொறியாளருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. சோதனை அளவுகள் பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும். மதிப்பீட்டுத் தொகைக்கு 30 சதவீதத்திற்கும் குறையாமல் சோதனை அளவுகள் மேற்கொள்ள வேண்டும்.
9. பணி மேற்கொள்ளப்படும் பொழுது ஒவ்வொரு நிலையிலும், பணியின் தரம் உறுதி செய்யப்பட வேண்டும் மற்றும் மண்டல செயற்பொறியாளரால் சோதனை அளவு செய்யப்பட்ட பின்னரே பட்டியல் வழங்கப்பட வேண்டும்.
10. பணி துவங்கும் முன்னர் பணியில் பயன்படுத்தப்படும் கட்டுமான பொருட்கள் அனைத்திற்கும் அரசு பொறியியல் கல்லூரிகளில் ஆய்வு செய்து தரம் உறுதி செய்யப்பட வேண்டும். தரச்சான்று பெறப்பட வேண்டும். கான்கிரீட் பணிகளுக்கு RCC cube தயார் செய்து தர உறுதிச் சான்று பெறப்பட வேண்டும்.
11. பணிகள் மாற்றம் ஏதேனும் இருப்பின் பேரூராட்சிகள் இயக்குநர் அல்லது கண்காணிப்புப் பொறியாளரின் அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும்.
12. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கும் முன்னரும் பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடித்த பின்னரும் புகைப்படம் (Digital Photo) எடுக்கப்பட்டு குறுந்தகடில் ஆவணப்படுத்தப்பட வேண்டும். புகைப்படங்களை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அப்புகைப்படங்கள் ஒரே இடத்தை காட்டும்படியாக (Same Place) இருத்தல் வேண்டும். ஒப்பந்ததாரர் செலவில் இப்பணி செய்ய வேண்டும்.
13. பணி மேற்கொள்ளப்படும் பொழுது பொது மக்களுக்கு மற்றும் போக்குவரத்திற்கும் எவ்வித இடையூறோ, பாதிப்போ நிகழாவண்ணம் பணிகள் நடைபெறும் இடத்தில் போதிய பாதுகாப்புடன் மேற்கொள்ள வேண்டும்.
14. நீர்நிலைகள் மற்றும் பூங்காக்களில் உரிய மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
15. நீர்நிலைகள் மற்றும் பூங்காக்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வருவாய் துறை ஆவணங்களில் கண்டுள்ள (Survey Record) நில அளவுக்கு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
16. இறுதிப்பட்டியல் பணி முடிவறிக்கை (Completion Report) கண்காணிப்பு பொறியாளர்/ உதவி செயற்பொறியாளரின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே இறுதிப்பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டும்.
17. இத்திட்டத்தினை மேற்கொள்ளும் போது பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகைக்கு உரிய பயனீட்டு சான்றுகளை உரிய காலக்கெடுவிற்குள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் பணி வாரியக

அனுப்பி வைத்து அரசால் தொகை விடுவிக்கப்பட்ட பின்னரே ஒப்பந்ததாருக்கு பட்டியல் தொகை வழங்கப்படும். இதன் காரணமாக ஏற்படும் கால தாமத்திற்கு ஒப்பந்ததாரர் முழு சம்மதம் இருப்பின் ஒப்பந்தப்புள்ளி வழங்கலாம்.

18. ஒப்பந்தப்புள்ளி நமுனா பேரூராட்சி அலுவலகத்தில் உரிய விண்ணப்பத்தின் பேரில் 13.04.2022 மாலை 5.45 மணி வரை உரிய தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும். ஒப்பந்தப்பணிக்கான முன்வைப்பு தொகை பேரூராட்சி அலுவலகத்தில் 13.04.2022 மாலை 5.45 மணிக்குள் வங்கி வரைவோலையாக மட்டுமே செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும்.
19. முன்வைப்புத்தொகை அரசுடமையாக்கப்பட்ட வங்கியின் வங்கி வரைவோலையாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
20. எக்காரணம் கொண்டும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு மேல் ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட மாட்டாது.
21. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் குறிப்பிட்டுள்ள தகுதி அடிப்படையில் ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும்
22. மேற்படி நிபந்தனைகளின்படி வரப்பெறாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட கால நேரத்திற்குப்பின் காலம் கடந்து வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும். பணிக்கு தேவையான தரமான சிமெண்ட் மற்றும் கட்டுமான பொருட்கள் ஆகியவற்றை ஒப்பந்ததாரர்கள் தன் சொந்த செலவில் வாங்கி அதற்கான தரசான்று பெற்று அதன்பின் பயன்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் மேற்படி சான்றினை அவசியம் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும்.
23. வேலை நடைபெறும் இடங்களில் பணி குறித்த விவரங்களை அடங்கிய தரமான தகவல் பலகைகள் அதாவது 4 அடி x 2 ½ அடி அளவில் திட்டத்தின் பெயர், வேலையின் பெயர், மதிப்பீட்டு தொகை, வேலை உத்திரவு வழங்கப்பட்ட நாள், வேலையை செய்து முடிக்கும் நாள் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் குறித்த விவரங்களுடன் வைக்கப்பட வேண்டும்.
24. வேலையை செய்ய ஒப்பந்ததாரரால் ஈடுபடுத்தப்பட்டுள்ள யாதொரு நபருக்கு அல்லது வேலைகளுக்கு அல்லது போக்குவரத்து வாகனத்திற்கு இவ்வேலையைச் செய்யும் பொழுது ஏற்படும் சேதாரம் அல்லது தேய்மானம் ஆகியவற்றிற்கு இப்பேரூராட்சி நிர்வாகம் பொறுப்பேற்காது.
25. வேலை உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் 5% காப்புத் தொகை (Performance Security) செலுத்தப்பட வேண்டும் அல்லது வங்கியில் உத்தரவாத சான்று வழங்கப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டவையாகும்.
26. ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ளவும், நிராகரிக்கவும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.
27. வேலை உத்திரவு கிடைக்கப்பெற்ற 3 தினங்களுக்குள் ஒவ்வொரு வேலைக்கும் ரூ.50/– மதிப்புள்ள முத்திரைதாளில் சம்பந்தப்பட்ட வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் M.D.S.S மற்றும் S.S.R.T ன்படி திருப்திகரமாக செய்து முடிக்கும் பொருட்டு செயல் அலுவலரிடம் உரிய படிவத்தில் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுக்க வேண்டியது. தவறினால் வேலை உத்திரவு இரத்து செய்யப்பட்டு வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.
28. வேலையின் மதிப்பீட்டுத் தொகையில் 1.00 சதவீதம் தொகையினை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல சந்தா தொகையாக வங்கி வரைவு மூலம் வேலை உத்திரவு வழங்கப்பட்ட மூன்று நாட்களுக்குள் செயல் அலுவலரிடம் வழங்க வேண்டும்.
29. வேலைக்கு பயன்படுத்தப்படும் பொருள்களுக்கு ISI தரச்சான்று பெற்று அனைத்தும் உதவி பொறியாளர் அவர்களின் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

30. இப்பணிகளில் தரைமட்டப் பணிகள் நடைபெறும் பொழுது குடிநீர்த்திட்ட பைப்லைன் மற்றும் தொலைதொடர்பு கேபிள்கள் பழுதுபட்டால் ஒப்பந்ததாரரே தனது சொந்த பொறுப்பில் பழுது நீக்கம் செய்து துறைக்கு ஒப்படைக்க வேண்டியது நிர்வாகம் இதற்கு பொறுப்பேற்காது.
31. பணி மேற்கொள்ள தேவைப்படும் தண்ணீரை ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அனுமதியின்றி பேரூராட்சி பொது குடிநீர் குாய்களிலிருந்தோ அல்லது இதர குடிநீர் ஆதாரங்களிலிருந்தோ வேலைக்கு தண்ணீர் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் மொத்த வேலையின் மதிப்பில் 1 சதவீதம் தண்ணீர் பயன்படுத்திய செலவிற்காக பட்டியலில் பிடித்தம் செய்து கொள்ளப்படும்.
32. ஒப்பந்ததாரருக்கு தொழில்நுட்ப தகுதித் இல்லாதிருந்தால் LCE/DCE/LCS படிப்பு முடித்த நபர் அல்லது ஒய்வு பெற்ற இளநிலை பொறியாளர் அல்லது LCS (Civil) போன்ற தகுதியுள்ள நபரை தொழில்நுட்ப உதவியாளராக இவ்வேலை நடைபெறும் இடத்தில் கண்டிப்பாக நியமிக்க வேண்டும். இவ்வாறு உதவி பொறியாளர் அவரது அதிகாரம் பெற்றவரால், செயல் அலுவலரால் அல்லது வேறு அரசு உயர் அதிகாரிகள் ஆ்ழ்வின் போது மேற்காணும் தகுதி உள்ள தொழில்நுட்ப உதவியாளர் இல்லாமல் வேலை நடைபெறுவது கண்டறியப்பட்டால் மறு அறிவிப்பின்றி ஒப்பந்ததாரருக்கு அபராதமாக ரூ. 1000/— விதிக்கப்படும்.
33. பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் அல்லது சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளால் வேலை நடைபெறுவதை கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும், அளவுகள், மேலளவுகள், எடுக்கவும் உரிமையுண்டு.
34. பேரூராட்சிகளின் உதவிப் செயற்பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் அல்லது சம்பந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகளின் அறிவுரைகளின்படி வேலையினை M.D.S.Sன்படி (Madras Detailed Standard Specification) திருப்திகரமாக செய்து முடிக்க வேண்டும்.
35. வேலை முடிவுற்றப்பின் சம்பந்தப்பட்ட பொறியாளரால் அளவு, மேலளவு எடுத்து சரிபார்த்து தயாரித்து கொடுக்கப்படும் பட்டியலில் கண்டுள்ள தொகைக்கு உரிய பிடித்தங்கள் செய்து கொண்டு மீதமுள்ள தொகை காசோலை மூலம் நியமன காலக்கெடுவிற்குள் வழங்கப்படும். திட்டப் பணிக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொகை கிடைத்த பின்புதான் தொகை வழங்கப்படும்.
36. நடப்பில் உள்ள விதிகளின்படி ஒப்பந்ததாரரின் பட்டியல் தொகையில் GST, IT மற்றும் உரிய இதர வரிகள் பிடித்தம் செய்து அதனை சம்மந்தப்பட்ட துறைக்கு செலுத்தி அதன் விவரத்தினை உரிய பதிவேட்டில் பதியப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.
37. இப்பணிகளுக்கான முன்பணங்கள் மற்றும் கட்டுமானப் பொருள்கள் ஏதும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படமாட்டாது. பின்வரும் காலங்களில் ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தணிக்கை மறுப்புகளோ, அல்லது உயர் அதிகாரிகளின் கட்டளைப்படியோ தொகை பிடித்தம் செய்ய வேண்டி இருப்பின், ஒப்பந்ததரரால் செலுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி இட்டு வைப்புத் தொகைகளிலிருந்து அத்தொகை சரிசெய்து கொள்ளப்படும். வைப்புத் தொகை கணக்கிலுலூள தொகைக்கு மேல் பிடித்தங்கள் இருப்பின், செயல் அலுவலரால் தெரிவிக்கப்படும் கால அளவிற்குள் ரொக்கமாக பேரூராட்சியில் செலுத்த ஒப்பந்ததாரர்கள் கட்டுப்பட்டவர்கள்.
38. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்ட பணிகளை உள் ஒப்பந்தத்திற்கு விடக்கூடாது.
39. வேலை முடிவுற்ற பின் ஒப்பந்ததாரர்களால் வேலை நடைபெற்ற இடங்களில் விட்டுச் செல்லப்படும் பொருள்கள் ஒரு மாத காலத்திற்குள் அப்புறப்படுத்திக் கொள்ளவில்லை எனில் அவை பேரூராட்சியால் கைப்பற்றிக் கொள்ளப்படும்.
40. இந்நிபந்தனைகளுக்குட்படாமலும், உரிய காலக் கெடுவிற்குள் வேலையை முடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு செயல் அலுவலர் தமக்கு தகுதியாய் தோன்றும் தொகையினை அபராதமாக விதித்து வசூலிக்க உரிமையுண்டு. மேற்குறிப்பிட்ட கால அளவுக்குள் பணியை

முடிக்காத ஒப்பந்ததாரர் அடுத்தப்படியாக வழங்க இருக்கும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள முற்றிலும் தகுதியற்றவர் ஆவார். உசிதம் போல் ஒப்பந்தப்புள்ளி தேதியை ஒத்திப்போடவோ அல்லது நிறுத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

41. மேற்படி பணிகளுக்கு தரம் மற்றும் வடிவமைப்புகள் தொடர்காக அவ்வப்பொழுது ஆய்வு செய்து பணியின் தரக் கட்டுப்பாடு உறுதி செய்ய அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (அல்லது) அரசு அனுமதி பெற்ற பொறியியல் கல்லூரி அல்லது பல்கலைக்கழகம் மூலம் தொழில்நுட்ப ஆலோசகர்களை மூனறாம் நபர் ஆய்வுக்கு (3rd Party Inspection) ஆக அமர்த்திக் கொள்ளப்பட வேண்டும். அதற்கான செலவினத்தை பொதுநிதி/ அல்லது மதிப்பீட்டில் உள்ள இதர செலவினத்திலிருந்து செலவு செய்யலாம்.

42. இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
இளம்பிள்ளை முதல்நிலை பேரூராட்சி.
சேலம் மாவட்டம்

பெறுதல்
பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்
இளம்பிள்ளை பேரூராட்சி

நகல் :

1) உதவி இயக்குநர் பேரூராட்சிகள் சேலம் மண்டலம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2) உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், சேலம் மண்டலம், சேலம் மாவட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
3) உதவிப்பொறியாளர், மேச்சேரி பேரூராட்சி (தொகுப்பு) அவர்களுக்கு தகவலுக்காக
4) அலுவலக விளம்பர பலகைக்கு